## இன்று போல் அன்றும் நேரத்திற்கு வந்திருந்தால் உயிரிழப்பே நேர்ந்திருக்காது:

# ஜோசப் விஜயின் முதுகுதான், கரூர் மக்களின் நினைவுச் சின்னம்!

## முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் பதிலடி

**சென்னை, ஜூலை 12 –**

**விஜயின் முதுகு தான் கரூர் மக்களின் நினைவுச்சின்னம். இன்று போல அன்றும் நேரத்திற்கு வந்திருந்தால் உயிரிழப்பே நேர்ந்திருக்காது. ஜனநாயகன் பட இசை வெளியீட்டு விழாவில் மகிழ்ச்சியோடு நடனம் ஆடிவிட்டு.. வலி வேதனையா.? நீங்க ரொம்ப “டீ ஆத்துறீங்கன்னு” மக்களுக்கு தெரியும் என்று கரூரில் முதல்வர் விஜய் பேசிய பேச்சிற்கு தி.மு.க. முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பதிலடி கொடுத்துள்ளார்.**

அவரது பேட்டி வருமாறு:-

இன்று கரூருக்கு சென்று பேசி உள்ளார் முதல்வர் விஜய். சில நாட்கள் முன்பு இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்காக திருச்சி கிழக்கிற்கு சென்றிருந்தார் முதல்வர் விஜய். இன்று திருச்சியில் இருந்து கரூர் சென்றதை போல அன்றே கரூர் சென்றிருக்கலாம். ஆனால் அப்போது போகவில்லை. அதற்கு காரணம் ஷோபா மாடல் கட்சியில் கரூர் எம்.ஆர். விஜயபாஸ்கர் இணையட்டும் எம்.எல்.ஏ பதவியை ராஜினாமா செய்யட்டும். அதன் பின் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு செல்லலாம் என விஜய் காத்திருந்தார்.

அன்று திருச்சிக்கு போனதிற்கு காரணம் இடைத்தேர்தல் இன்று கரூர் சென்றதற்கு காரணம் இடைத்தேர்தல். அந்த இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் எம்.ஆர் விஜய பாஸ்கரை அருகில் வைத்து கொண்டு ஊழல் பற்றி எல்லாம் பேசுகிறார். 100 கோடி ரூபாய் மதிப்புள்ள நில அபகரிப்பு வழக்கில் தலைமறைவாக இருந்து கைது செய்யப்பட்டவர் தான் இந்த விஜயபாஸ்கர். விராலிமலை முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் விஜயபாஸ்கரை குட்கா வழக்கு விசாரணைக்கு வர சொல்லி உள்ளது நீதிமன்றம். இவர்களை அருகில் வைத்துக்கொண்டு ஊழலை ஒழிப்பேன் என்று பேசுகிறார்.

மீண்டும் மீண்டும் அவர் சொல்ல வரும் நரேட்டிவ் திராவிட முன்னேற்ற கழகம் தான் எல்லாவற்றிற்கும் காரணம் என்பது. அதே போல கரூர்ல நடந்த சம்பவத்திற்கு திராவிட முன்னேற்ற கழகம் தான் காரணம் என்று சொல்லியிருக்கிறார்.

அவர் பேசும் போது தெரிந்தோ தெரியாமலோ அவருடைய ஸ்கிரிப்ட் ரைட்டர் கொடுத்ததை அப்படியே பேசியிருக்கிறார். ஒரு முதலமைச்சராக பதவி ஏற்றிருக்கிறோம் என்ற எண்ணம் இன்னும் அவருக்கு இல்லை. தற்போது தான் ஒரு முதலமைச்சர் என்ற நினைவே இன்றி பேசி இருக்கிறார்.

முதல்வராகிய அவருக்கு கீழ் இருக்கும் காவல்துறையை இன்றைக்கு அவரே குற்றம் சாட்டி பேசியிருக்கிறார். காவல்துறை என்பது ஒரு இன்ஸ்டிடியூஷன், அது எப்போதும் இருக்கும், யார் ஆட்சிக்கு வந்தாலும் இருக்கும்.

### கரூரிலிருந்து சென்னைக்கு ஓடி வந்தது யார்?

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆதாரமில்லாமல் காவல்துறையை பற்றி பேசலாம், ஏன் என்றால் அவர் ஏற்கனவே ‘புரட்சி வெடிக்கும், ஜென்சி புரட்சி வெடிக்கும்’ என்று பதிவு போட்டுவிட்டு அதற்கு ஜாமீன் கேட்டு கோர்ட்டுக்கு போகும்போது தன்னை பற்றி ஒரு தகவலை நீதிமன்றத்தில் கூறி இருப்பார். ஆகவே அதே தகவலை இப்போதும் கூறி தப்பித்துக் கொள்வார்.

ஆனால் ஒரு முதலமைச்சராக பதவியேற்ற பிறகு விஜய் அவர்கள் காவல் துறையை குற்றம் சொல்வது என்பது மிக தவறான செயல், தவறான முன்னுதாரணம். இதுக்கு ரியாக்ஷன் அந்த துறையில இருந்தே எப்படி இருக்கும் என்பதை போக போகத்தான் பார்க்கணும். எனவே அவர் வந்து தன்னுடைய முதுகில் இருக்கிற கறையை மறைப்பதற்கு மற்றவர்களை குற்றம் சொல்வதுதான் தன்னுடைய வழக்கம் என்பது போல, காவல்துறைக்கு அன்றைக்கு ஆளுங்கட்சியாக இருந்தவர்கள் வழிகாட்டினார்கள் என்று பேசிக்கொண்டிருக்கிறார்.

அதேபோல, இன்னும் திரைப்படத்தை விட்டு அவர் வெளியில் வரல. ‘ஓடு ஓடு ஓடு’ என்று அதுக்கு வேற செய்கை காட்டுகிறார். அதுக்கு எங்களுடைய முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி மிக அழகாக பதில் சொல்லியிருக்கிறார்: “ஓடு ஓடு ஓடு என்று… கரூர் சம்பவம் நடந்த அன்று சம்பவம் முடிந்த பிறகு கரூரிலிருந்து சென்னைக்கு ஓடி வந்தது யார் என்று நாட்டுக்கே தெரியும்.” அந்த ‘ஓடு ஓடு ஓடு’ என்பதற்கு அவர்தான் உதாரணம்.

அதேபோல கரூரில் நினைவு சின்னம் அமைப்போம் என்று சொல்லியிருக்காரு. ஏற்கனவே மக்கள் மனத்தில அந்த நினைவு சின்னம் இருக்கிறது. திருச்சி விமான நிலையத்தில பத்திரிகையாளர்கள், ஊடகத்தை சேர்ந்த வர்கள் “சார் சார் சார். . “ என்று கூப்பிட்டு கரூரில் மக்கள் இறந்தது பற்றி கேட்ட போது ஒரு வேக நடை போட்டாரே, இன்றைக்கு சொன்ன அந்த ‘ஓடு ஓடு ஓடு’ என்ற முதுகு, கரூர் மக்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் நினைவு சின்னமாக அவர்கள் மனதிலே என்றும் இருக்கும். நீங்க அமைக்கப் போற நினைவு சின்னம் “ ஒரு நடிகர் பிரச்சாரத்துக்கு வருவதாக சொல்லிட்டு நேரத்திற்கு வராமல் தாமதமாக வந்த காரணத்தினால் 41 பேர் உயிரிழந்தார்கள்” என்பதை கால காலத்திற்கும் நாட்டு மக்களுக்கு நினைவு படுத்தும்.

### பொய்யான குற்றச்சாட்டு!

‘ஸ்டாலின் சார்’ SOP போட்டு தடுத்திட்டாங்க எனறு கூறினார், அதே ‘ஸ்டாலின் சார்’ போட்ட SOPதானே இன்னைக்கு நீங்க பின்பற்றி இருக்கீங்க? நீங்கதான் முதலமைச்சர் ஆயிட்டீங்களே, பிறகு ஏன் அதை பின்பற்றணும்? அதை பின்பற்றினால்தான் எந்த பிரச்சனையும் இல்லாமல் உயிரிழப்பு இல்லாமல் இந்த கூட்டங்களை நடத்த முடியும் என்பதை இப்ப நீங்க உணர்ந்துட்டு இருக்கீங்க, ஆனா அதையே குற்றச்சாட்டா சொல்றீங்க.

அன்று நீங்க கரூருக்கு வரும்போது இதேபோல பந்தல் அமைத்து, சேர் போட்டு,



ஸ்நாக்ஸோட குடிதண்ணீர் வழங்கி, இன்னைக்கு மாதிரி அடையாள அட்டை வரை கொடுத்து இருந்தால் அன்று இந்த விபத்து நடந்திருக்காதே, உயிர்களை பாதுகாத்திருக்கலாமே. கரூர் நிகழ்வுக்கு வரும்போது காவல்துறை எச்சரிக்கை செய்யவில்லை என ஒரு பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். கரூர்க்கு போகும்போது கூட்டம் அதிகமா இருக்கு உங்களை முன்னாடியே நிறுத்த சொல்லி காவல் துறையில சொல்லியிருக்காங்க. அது காவல்துறை விசாரணை, சிபிஐலயும் சொல்லியிருக்காங்க. ஆனால் “எங்களுடைய திரைப்பட யூனிட் அங்க உள்ள கேமராவோட காத்திருக்கு” என்று நீங்க உள்ள போனீங்க. போனதற்கு காரணம் நீங்களும் உங்க திரைப்பட யூனிட்டும்தான். அதனால்தான் இந்த விபத்து நிகழ்ந்தது என்பது பட்டவர்த்தனமாக எல்லோருக்கும் தெரிந்த செய்தி. ஆனால் அதை இன்னைக்கு மறைப்பதற்கு காவல்துறை அலர்ட் செய்யல அப்படின்னு சொன்னீங்க. இன்னைக்கு டைமுக்கு போன நீங்க அன்று அந்த டைமுக்கு போயிருந்தீங்கனாலும் இந்த பிரச்சனை எழுந்திருக்காது.

எனவே பேசுவதற்கு முன்னால் அந்த ஸ்கிரிப்ட்டை ஒரு மனப்பாடம் பண்றதுக்கு முன்னாடியே நீங்க மனசுல உள்வாங்கி படிச்சிருந்தீங்கன்னா, இதுல சொல்ற குற்றச்சாட்டு முழுதும் நம்மளையே தானே சொல்ற மாதிரி இருக்குது என்ற எண்ணம் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும்.

கரூருக்கு நீங்க போறதுக்கு முன்னாடி உங்க தலைமை கழகத்தில இருந்து 27.09.2025 அன்றைக்கு 12 மணிக்கு வந்துருவாருன்னு அறிவிப்பு கொடுத்தாங்க. உங்க தலைமை கழகம் அறிவிப்பு கொடுத்ததோட இல்லாமல், உங்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அவர்கள் பத்திரிகையாளர் சந்திப்பில அதை பேட்டியாக கொடுத்த வீடியோ இன்றைக்கும் யூடியூபில் இருக்கிறது.

### மலேசியாவில் இசை மகிழ்ச்சியோடு நடனம்!

எனவே எல்லா விதத்திலும் பார்த்தால் நீங்க உங்களுடைய தவறை முழுவதும் மறைத்துவிட்டு, மீண்டும் மீண்டும் கரூர் சம்பவத்தில் திராவிட முன்னேற்ற கழகம் உங்கள் மீது குற்றம் சுமத்துகிறது என்று சொன்னீங்க. உண்மையில் அன்று எங்கள் தலைவர் என்ன சொன்னாரு? “எந்த ஒரு அரசியல் கட்சி தலைவரும் தன்னுடைய அரசியல் கட்சியை சேர்ந்த தொண்டர்கள் உயிரிழப்பதை விரும்ப மாட்டார்கள்” என்று மிக பெருந்தன்மையா சொன்னார். காரணம் அவர் உயர்ந்த உள்ளம் கொண்ட ஒரு மனிதர். அவருக்கும் உங்களுக்கும் எந்த விதத்திலும் ஒப்பிட முடியாது. நாங்கள் குற்றம் சுமத்த வேண்டும் என்று முடிவு செய்திருந்தால் வழக்கே போட சொல்லியிருக்கலாம். வழக்கே போட்டிருந்தால் இன்னைக்கு என்ன நிலைமை இருந்திருக்கும்? ஆனால் எங்கள் தலைவர் பெருந்தன்மை காட்டியதனால், இன்றைக்கு நீங்கள் மனசுல பட்டதெல்லாம் வாயில வந்ததெல்லாம் பேசிட்டு இருக்கீங்க.

அடுத்தது பேசும் போது ஒரு வசனம் சொல்லியிருக்கீங்க: “எவ்வளவு உயரத்திற்கு சென்றாலும் மனதிற்கு ஏற்பட்ட காயங்களை மறக்க முடியாது. என் வாழ்வில் அதிக வலி காயம் கொடுத்தது கரூர் சம்பவம்தான். மக்களை சந்திக்கவும் மக்களிடம் பேசவுமே கரூருக்கு வந்தேன்” அப்படின்னு சொன்னவரு வந்தது எத்தனை நாள் கழித்து? அந்த சம்பவம் நடந்து 285 நாள் கழித்து இப்பதான் வர்றாரு. அன்று தான் எங்க திராவிட முன்னேற்ற கழக ஆட்சி உங்களை போகவிடாமல் தடுத்தது என்று சொன்னீங்க, இப்ப உங்கள் ஆட்சி அமைந்து ரெண்டு மாதம் ஆகுது, முன்னாடியே போயிருக்கலாமே, ஏன் போகல?

அந்த காயம் வலி எல்லாம் அப்படியே இருந்துதா அந்த 285 நாளுன்னு கேட்டா, இடையில வந்து உங்களுடைய மனதிற்கு பிடித்தவர்கள் வீட்டு கல்யாணத்துல சிறப்பா கலந்துக்கிட்டீங்க. பிறகு டிசம்பர் 27 உங்களுடைய திரைப்படமான ‘ஜனநாயகம்’ திரைப்பட இசை வெளியீட்டு விழா மலேசியாவில் நடந்தபோது போய் கலந்து கொண்டு மிகுந்த மகிழ்ச்சியோடு நடனமும் ஆடினீர்கள். ஆனா உங்களுக்கு மனதிலே வலியும் காயமும் கரூர் போற வரைக்கும் இருந்ததுன்னு சொல்றீங்க. அப்புறம் உங்க பிறந்த நாளை மிக சிறப்பா கொண்டாடுனீங்க. இதெல்லாம் செஞ்சுகிட்டு “எனக்கு மனதில் வலி இருந்தது, காயம் இருந்தது, நான் கரூர் வந்துதான் இதெல்லாம் ஆத்திக்கிறேன்” என்று சொல்வது ரொம்ப டீ ஆத்துறீங்கன்னு மக்களுக்கு தெரியும்.

### பெண்கள் பாதுகாப்பிற்கான நடவடிக்கை என்ன?

ஒரு முதலமைச்சரான பிறகு முதலமைச்சருக்கான தகுதியோடு பேசுவதை விடுத்து மற்றதெல்லாம் பேசிக்கிட்டு இருக்கீங்க. உங்க ஆட்சி அமைந்த பிறகு என்னென்ன செஞ்சிருக்கோம்னு விளக்கமாக சொல்லாம அப்படி மேலோட்டமா போயிட்டே இருந்தீங்க. பெண்கள் பாதுகாப்புதானே திராவிட முன்னேற்ற ஆட்சியில் நீங்கள் மிகப்பெரிய குற்றமாக சுமத்தினீர்கள், அந்த பெண்கள் பாதுகாப்பிற்கு இந்த ஆட்சியில் நீங்கள் என்ன நடவடிக்கை எடுத்தீங்கன்னு சொல்ல முடியுமா?

சொன்னால் உங்க கட்சி ஸ்ரீவைகுண்டம் எம்எல்ஏ விஜய் சரவணன் அவருடைய வழக்கே உங்களுக்கு பதில் சொல்ல வேண்டிய இடத்திற்கு வரும். உங்க கட்சியை சேர்ந்த ஒரு பெண் அவர் மீது புகார் அளித்து, ஊடகங்கள்ல பேட்டி கொடுத்து அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். ஆனால் யாரும் அதை பற்றி வாய் திறப்பதில்லை.

இப்ப கடைசியா என்ன ஆச்சு? விஜய் சரவணனுக்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போட்டு இருக்கீங்க. அவர் துப்பாக்கி தூக்கிட்டு போய் லாரி டயரை செக் பண்ணிட்டு இருக்கிறாரு. ஒருவேளை இவரால ஏற்கனவே பதிக்கபட்ட அந்த பெண் போல இன்னும் வேறு சம்பவம் ஏதும் நடந்து புகார் வந்திடக்கூடாது என்று நினைத்து அந்த பெண்களை பாதுகாக்க இவருக்கு போலீஸ் பாதுகாப்பு கொடுத்தீங்களோ என்னமோ,

முதல்ல உங்க கூட்டத்தில இருக்கிறவங்க என்ன பண்றாங்கன்னு பாருங்க. இங்க ஆலந்தூர்ல ஒரு பகுதி செயலாளர் வேம்புளி, அவர் மீது ஒரு பெண் பாலியல் வழக்கு கொடுத்திருக்கிறார். பெண்களை ஆபாசமாக வீடியோ எடுத்து மிரட்டிய சேலத்து மணிகண்டன்… இப்படி பட்டியல் நீண்டு கொண்டே போகும். இப்படி உங்களுக்கு எதை சொல்லி நீங்கள் ஆட்சிக்கு வந்தீர்களோ அதை சரியாக செய்தீர்களா என்று முதல்ல பாருங்க.

### வழக்கறிஞர் நியமனத்திற்கு லட்சக்கணக்கில் லஞ்சம்!

ஊழல் வழக்கு பற்றி சொல்லணும்னா இன்றைக்கு தமிழ்நாடு முழுவதும் சந்தி சிரிக்குது. வழக்கறிஞர் நியமனத்திற்கு லஞ்சமாக இவ்வளவு பணம் வாங்கி இருக்காங்கன்னு என்பதை திராவிட முன்னேற்ற கழகம் குற்றம் சொல்லவில்லை உங்கள் தவெக கட்சியை சேர்ந்த ஒரு பெண் வழக்கறிஞர் ஞான சௌந்தரி என்கிறவங்க வழக்கு தொடுக்கிறாங்க. திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பாகவும் லஞ்ச ஒழிப்பு துறையில புகார் கொடுக்கப்பட்டிருக்குது. உங்கள் ஊழலற்ற ஆட்சிக்கு வேற சாட்சி எல்லாம் வேணாம், உங்க அரசு வழக்கறிஞர் நியமனமே போதுங்கிற நிலைமைதான் இருக்கு.

அதேபோல வேலூர்ல செங்கல் சூளைக்கு மாத மாதம் லஞ்சம் கொடுக்கணும்னு கேட்டது உங்க நிர்வாகி, அவங்க மேல நடவடிக்கை எடுத்திருக்கீங்களா? இங்க திருவொற்றியூர்ல உங்க பகுதி செயலாளர் ராகுல் என்கிறவரு வீடு கட்டுவதற்கு ஒரு பெண்ணிடம் 50,000 பணம் கேட்டார் என்று புகார் வருது. இப்படி உங்களுடைய நிர்வாகிகள் எல்லா இடங்களிலும் ஊழல் குற்றச்சாட்டுகளோடு இன்றைக்கு பொதுவெளியிலே வந்து அம்பளப்பட்டு நிற்கின்றனர். அப்புறம் சொல்றார் ஒவ்வொரு அலுவலகத்துக்கும் போய் பாருங்க எங்கயாவது ஊழல் இருக்கா, லஞ்சம் இருக்கான்னு. அது அரசு அலுவலகம் எல்லாம் விடுங்க, பனையூர் கட்சி ஆபீஸ்ல அந்த சனிக்கிழமை சனிக்கிழமை நின்னாலே போதும் – சி. விஜயபாஸ்கர் வராரா, எம்.ஆர். விஜயபாஸ்கர் வராரா, இல்லை கடந்த காலங்களில் இருந்த அமைச்சர்கள் வராங்களானு, இவர்களுக்கு ஒவ்வொருத்தருக்கும் என்னென்ன வழக்கு இருக்கு, அது என்ன வழக்கு, இதெல்லாம் தெரிந்துதானே நீங்க உங்க வாஷிங் மெஷின்ல போட்டு வெளுத்திட்டு இருக்கீங்க.

### தினம் தினம் மக்கள் போராட்டம்!

இந்த வாஷிங் மெஷின்ல போட்டு நீங்க வெளுத்து கொண்டு வர்ற கதையை இன்றைக்கு நாடே பேசிக் கொண்டிருக்கிறது. எனவே இந்த ஊழல், பெண்கள் பாதுகாப்பு இதெல்லாம் நீங்க பேசுவதற்கும் உங்கள் ஆட்சிக்கும் எந்த விதத்திலும் தொடர்பில்லாமல் இருக்கிறது.

தினம் தினம் மக்கள் போராட்டம் செய்து கொண்டிருக்கிறார்கள். நேற்று வரைக்கும் மின்சார பிரச்சனைக்காக போராடுவது தொடர்ந்து கொண்டிருக்கிறது. விவசாயிகள் போராடிக் கொண்டுள்ளனர். இன்றைக்கு மக்கள் பயணிக்கின்ற அந்த விடியல் பயண பேருந்துகள் குறைக்கப்பட்டிருக்கிறது. விடியல் பேருந்துகளில் இருந்து விடியல் என்ற வார்த்தை நீக்கபட்டுள்ளது. நான் முதல்வன்னு இருந்தால் எங்க கழக தலைவர் தளபதி ஞாபகம்தான் வரும் என்று அந்த பெயரையும் மாற்றிவிட்டீர்கள். அதேபோல விடியலை எடுத்துட்டு மகளிர் பயணம்… இப்படியே போயிட்டே இருந்தால் நீங்க ஒரு கட்டத்துல தமிழ்நாடு அரசு என்று அறிஞர் அண்ணா பெயர் வைத்தார், ஆகவே அதையும் மாத்திடலாம்னு வந்து நிப்பீங்கன்னு நினைக்கிறேன்.

எனவே மாண்புமிகு முதலமைச்சர் மிஸ்டர் விஜய், உங்க ஸ்டைல்ல சொன்னால் ‘ப்ரோ விஜய்’, இல்ல ‘விஜய் சார்’, எப்படி சொன்னாலும் சொல்றேன் – இடைத்தேர்தல் பிரச்சாரத்துக்கு போயிட்டு நேரா ஓட்டை கேட்டுட்டு வந்துருங்க. அங்க வந்து தேவையற்ற வசனங்கள் எல்லாம் பேசிட்டு இருக்க வேணாம். ஒரு ஆட்சி அமைந்தால் அந்த ஆட்சி மக்களுக்கான ஆட்சியாக இருக்க வேண்டும், தன்னுடைய கட்சிக்கான ஆட்சியாக இருக்கக்கூடாது.

உங்களுக்கு வாக்களித்த மக்கள் மகிழ்ச்சி அடைவதற்காகத்தான் நீங்க போய் ஒவ்வொரு இடத்திலயும் பேசிட்டு இருக்கீங்க. வைப் பண்ணா போதும், அவங்க வந்து பார்த்து மகிழ்ச்சியா நமக்கு ஆதரவா தொடர்வாங்கன்னு நினைக்கறீர்கள். மீதி வாக்களிக்காத 65% மக்கள் தமிழ்நாட்டில்தான் இருக்கிறார்கள் என்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்.

எங்கள் தலைவர் முதலமைச்சரா பொறுப்பேற்கும்போது சொன்னார், “வாக்களித்தவர்களுக்கும், வாக்களிக்காதவர்களுக்கும் சேர்த்துதான் முதலமைச்சர் என்ற பதவி, அவர்களையும் அரவணைத்து அவர்களுக்கான பணியை செய்வேன்” என்று சொன்னார். ஆனால் நீங்கள் அதற்கு இன்னும் உங்களை தயார்படுத்திக் கொள்ளவில்லை. இன்னும் நீங்கள் முதலமைச்சராக மனதளவில் மக்களுக்கான பிரச்சனைகளை தீர்த்து வைப்பதற்கு முன்வர வில்லை.

இன்னும் தவெக கட்சி தலைவராகவே உள்ளீர்கள். மக்கள் எல்லா நேரத்திலும் ஒரே மாதிரியாக இருக்க மாட்டாங்க. நீங்க முன்னாடி பேசும்போது வெறும் அகப்பையை எப்படி வேணாலும் சுத்துனீங்க, இப்ப அப்படி இல்லை, நீங்க சுத்துற அகப்பையில அதிகாரம் இருக்கிறது. ரொம்ப சுத்துனீங்கன்னா அதிகாரம் கீழ வெளியில வந்து விழுந்துரும். அதனால் பேசும்பொழுது நிதானத்தோடு, முதலமைச்சர் என்ற பதவிக்கான நாகரீகத்தோடு நீங்கள் பேச வேண்டும். அதோடு இந்த சோபா மாடல் வேலைகளை நிறுத்திக் கொண்டு மக்களுக்கான பணிகளை தொடர வேண்டும்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சிவசங்கர் தெரிவித்துள்ளார்.



விடுதலைப் போராட்ட வரலாற்றின் முதல் வீரர் – மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் 269வது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (11.7.2026) சென்னை, எழும்பூரில் அமைந்துள்ள மாவீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முன்னாள் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி. பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார் ஆகியோர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர்.